**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 409/2019 P.W. 2/L.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சாகுல் ஹமீது | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. முகமது ஹமீது | **Age** | : | |
| **Address** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.04.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். 12.11.2012ம் தேதி காலை 09.30 மணியளவில் நான் மீன் வாங்குவதற்காக குளச்சல் மார்க்கெட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் ராமதாஸ் என்பவருக்கும் மாறி மாறி சண்டை நடந்துக் கொண்டிருந்தது. அதில் ராமதாஸ் என்பவருக்கு பல் உடைந்து விட்டது. பின்னர் அங்கு கூடியிருந்த நபர்கள் ராமதாஸ் என்பவரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. நான் குளச்சல் ஆட்டோ ஸ்டேன்டில் ஆட்டோ ஓட்டுகிறேன் என்றால், சரிதான். காயம்பட்ட ராமதாஸ் என்ற நபரும் அதே ஸ்டேன்டில் ஆட்டோ ஓட்டுநராக உள்ளார் என்றால், சரிதான். இன்று ராமதாஸ் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால், சரிதான். போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால், சம்பவம் நடந்த சிறிது நாட்களில் கேட்டார்கள். அது எப்பொழுது என்று சரியாக ஞாபகம் இல்லை.

2. நான் நீதிமன்றத்தில் முதல்விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால், சரிதான். ராமதாஸ்–க்கு பல் உடைந்ததை அவர் கூறினாரா என்றால், இல்லை. நான் நேரடியாகப் பார்த்தேன். நான் அந்த பல்லைப் பார்த்தேன் என்றால், சரிதான். விழுந்த பல்லை அ.சா.1

மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றாரா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. அங்கு கூடியிருந்த நபர்கள் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

3. காயம்பட்ட நபரான அ.சா.1 –க்கு முகத்தில் காயம் இருந்ததா என்றால், மாறி மாறி சண்டை போட்டதால் காயம் ஏற்பட்டது. இரு நபர்களும் மாறி மாறி கையினால் தாக்கி கொண்டார்கள் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு சம்பவ தேதியன்று காயம் ஏற்பட்டதா என்றால், இல்லை. அ.சா.1 ராமதாஸ் குற்றம் சுமத்தப்பட்ட நபரை எங்கு அடித்தார் என்பதை நான் பார்க்கவில்லை என்றால், சரிதான்.

4. நான் பார்க்கும் பொழுது இரு நபர்களுக்கும் சண்டை முடிந்து ராமதாஸ்க்கு இரத்தம் வந்துக் கொண்டிருந்தது என்றால், சரிதான். போலிஸ் விசாரணையில் அ.சா.1 ராமதாஸ்க்கு எதனால் காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை கூறியுள்ளேனா என்றால், சரிதான். போலிஸ் விசாரணையில் நான் மீன் வாங்க செல்லும் போது சம்பவத்தை பார்த்தேன் என்ற விவரத்தை கூறியுள்ளேன் என்றால், சரிதான்.

5. மீன் சந்தையில் அப்பொழுது கேட் எந்த பக்கத்தில் இருந்தது என்றால், வடக்குப் பக்கத்தில் இருந்தது. நான் அன்றைய தினம் ராமதாஸ்–யை எங்கு வைத்துப் பார்த்தேன் என்றால், சந்தையின் உள்ளே வைத்து பார்த்தேன். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு செல்லும் போது ராமதாஸ் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் எந்த திசையில் எவ்வளவு தூரத்தில் இருந்தார்கள் என்றால், சுமார் 10–15 அடி தூரத்தில் இருந்தார்கள். ஆனால் திசை எனக்குத் தெரியவில்லை.

6. அன்றைய தினம் ராமதாஸ்–ன் ஆட்டோ அங்கு இருந்ததா என்றால், இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் ஆட்டோ அங்கு இருந்ததா என்றால், அது சரியாக தெரியவில்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபரால் ராமதாஸ்க்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் ராமதாஸ்–ம் நானும் ஒரே தொழில் சங்கத்தை சேர்ந்த நபர்கள் என்பதால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் வேறு தொழில் சங்கத்தைச் சேர்ந்த நபர் என்பதால் அவருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.